Registered as a Newspaper

Your Friends in Finance
SHABRA
நிதித்துறையில் உங்கள்
நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA
Unico Finance Ltd.

உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை:
ரூ. 1-25

Your Friends In Finance
SHABRA
நிதித்துறையில் உங்கள்
நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA
Unico Finance Ltd.

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஷூ ஆனி மீ 14 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1407 ஜுல்ஹஜ் பிறை 1 (28 — 06 — 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 182

இந்திய நிவாரணப் பொருள்கள் வழங்கும் வேலைகள் நேற்று கொழும்புத்துறை புனித செபமாலை மாதா கோயில் அகதிகள் முகாமில் ஆரம்பமான பொழுது எடுக்கப்பட்ட படங்கள்.

இந்திய செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி திரு. வேணுகோபால் அகதி ஒருவருக்கு நிவாரணப் பொருள் வழங்குவதையும் படத்தில் காணலாம்.

[படம் ஜெயம்]

இந்திய நிவாரணப் பொருள்கள் விநியோகம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 28

இந்திய அரசின் நிவாரண உணவுப் பொருள்கள் நேற்று வைபவ ரீதியாக வழங்கப்பட்டன.

கொழும்புத்துறை செபமாலை மாதா ஆலய அகதி முகாமிலும் மல்லாகம் அகதிகள் முகாமிலும் உள்ள ஐநூறுக்கும் அதிகமான குடும்பங்களுக்கும் இந்த முதற்கட்ட விநியோக வேலைகள் ஆரம்பமாகின.

இந்தியச் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளும், ஸ்ரீலங்காச் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளும், யாழ்ப்பாண செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளும் மங்கள விளக்கேற்றி நிவாரணப் பொருள்கள் வழங்கும் வைபவத்தைஆரம்பித்து வைத்தனர்.

வைபவத்தில் யாழ். அரச அதிபர், உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி, மேலதிக அரச அதிபர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கொழும்புத்துறை அகதிகள் முகாமில் 560 குடும்பங்களைச் சேர்ந்த மூவாயிரத்து இருநூறு அகதிகள் தங்கியுள்ளனர்.

மல்லாகம் அகதிகள்

(4-ஆம் பக்கம் பார்க்க)

இந்தியக் கப்பல்களால் ராணுவத்துக்கு சங்கடம்!

இந்திய அரசினால் வழங்கப்பட்ட மருந்துப் பொதிகளை இந்தியச் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி திரு. எஸ். சௌத்திரி யாழ் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் எஸ். நச்சினார்க்கினியனிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கிறார்.

[படம் - ஜெயம்]

இந்திய செஞ்சிலுவை பிரதிநிதிகளை விரைந்து

திருப்பி அனுப்ப மறைமுக முயற்சி

யாழ்ப்பாணம், ஜூன் 28

தமிழ் மக்களுக்கு நிவாரணப் பொருள்களை ஏற்றிக் கொண்டு வரும் இந்தியக் கப்பல்கள் காங்கேசன் துறைமுகத்தில் தங்குவது வட பகுதியில் உள்ள ஸ்ரீலங்கா ஆயுதப் படையினருக்குப் பெரும் சங்கடத்தை உண்டுபண்ணியிருப்பதாக அவ் வட்டாரங்கள் கருதுகின்றனவாம்.

நிவாரணப் பொருள்களை, இந்தியக் கப்பல்கள் அடுத்தடுத்து ஏற்றி வந்தால் படையினருக்குத் தேவையான உணவுப் பொருள்களையும், ஆயுதங்களையும் கொண்டு வர முடியாது.

நிவாரணப் பொருள்களை இந்தியக் கப்பல்கள் தொடர்ந்து கொண்டு வருவது என்பது குடாநாட்டில் இராணுவ நடவடிக்கைகளுக்கு மறைமுகமாக முட்டுக்கட்டை போடுவதற்கு ஒப்பாகும் இவ்வாறு ஸ்ரீலங்கா ஆயுதப் படை உயர் அதிகாரிகள் அதிருப்தி தெரிவித்திருப்பதாக அறியப்படுகிறது.

இந்த முட்டுக்கட்டையை முறியடிக்கும் விதத்தில் இந்திய செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளை விரைவில் திருப்பி அனுப்ப, யாழ்ப்பாணத்தில் உள்ள சிவில் நிர்வாக அதிகாரிகள் மூலம் மறைமுக முயற்சி மேற்கொள்ளப்படுவதாகவும் அறியப்படுகிறது.

நிவாரணப் பொருள்கள் வழங்குவது சம்பந்தமாக ஸ்ரீலங்காவும் இந்தியாவும் செய்து கொண்ட ஒப்பந்தத்தில், நிவாரணப் பொருள்கள், இந்திய, ஸ்ரீலங்காசெஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள்மேற்பார்வையில் விநியோகிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் ''ஐலண்ட் பிறைட்''டில்வந்த நிவாரணப் பொருள்களை விநியோகித்து முடிந்ததும், இந்திய செஞ்சிலுவை அதிகாரிகளை அனுப்பிவிட முயற்சிகள் நடப்பதாக அறியவந்துள்ளது.

இந்தியசெஞ்சிலுவைச் சங்கத்தினர் இங்கிருக்கும்போது ஆயுதப்படைகள் தமது தாக்குதல் நடவடிக்கைகளை நடத்த முடியாத இக்கட்டான சூழ்நிலை ஏற்படும் என

(4-ஆம் பக்கம் பார்க்க)

இந்தியா சென்றபோது கைதானோரில் 103 பேர்

நேற்று விடுவிக்கப்பட்டனர்

காங்கேசன்துறை, ஜூன் 28

இந்தியாவுக்கு அகதிகளாகச் சென்ற சமயம் ஆழ்கடலில் வைத்துக் கைதுசெய்யப்பட்ட 125 பேரில் 103 பேர் நேற்று விடுதலை செய்யப்பட்டனர். ஏனைய 22 பேரும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 23 ஆம் திகதி வேலணையிலிருந்து இரு படகுகளில் புறப்பட்டுச் சென்ற இந்த 125 பேரும் நடுக்கடலில் வைத்து இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

3 தினங்களாக காங்கேசன்துறை ஹாபர்வியூ ஹோட்டல் இராணுவ முகாமில் இவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

விசாரணை செய்யப்பட்டு 103 பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

இவர்கள் இராணுவத்தினரால் மாவிட்டபுரம் சந்திவரை நேற்று நண்பகல் கொண்டுவரப்பட்டு விடப்பட்டனர்.

(இ-68)



இப்ப யோசிச்சு என்ன பயன் பாருங்கோ. ஒப்பந்தம் செய்யிற போதெல்லோ உதுகள் எல்லாத்தையும் யோசிச்சிருக்க வேணும்......!

இன்னும் ஒரு மாதம் தங்குவர்

யாழ்ப்பாணம், ஜூன்28

யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ளஇந்தியஉயர் அதிகாரிகள் இன்னும் ஒரு மாத காலத்துக்கு தங்கியிருப்பார்கள் என்று யாழ் செயலக அதிகாரி ஒருவர் கூறினார்.

இந்தியாவிலிருந்து இன்னும் 10 ஆயிரம் தொன் நிவாரண உதவிப் பொருள்கள்கப்பல்களில் வரவுள்ளன.

அவற்றின் விநியோக வேலைகளைப் பார்வையிடவே அதிகாரிகள் இங்கே தங்கி நிற்க உள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(இ-ள)

பூரி கொழும்பு சென்றார்

யாழ்ப்பாணம், ஜூன் 28

இந்திய நிவாரணப் பொருள்களை ஈழத் தமிழர்களுக்கு வழங்க வந்த இந்தியத் தூதரகத்தின் முதலாவது செயலாளர் திரு. எச். எஸ். பூரி நேற்று அவசரம் அவசரமாக கொழும்பு சென்றார்.

இவருடன் வந்த கப்டன் குப்தா தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ளார்.

இதே வேளை இந்தியத் தூதரகத்தின் மற்றைய உயரதிகாரி ஒருவர் அடுத்த வாரம் அளவில் யாழ்ப்பாணம் வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்றுக் காலை காங்கேசன்துறை சென்ற திரு. பூரி ஹெலிக்கொப்டர் மூலம் கொழும்புக்குப் பயணமானார்.

(இ-10)

65 பேர் கைது

கொழும்பு, ஜூன் 28

தடை செய்யப்பட்ட மக்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த சுமார் 65 உறுப்பினர்கள் நேற்று பொலீஸாரினால் கைது செய்யப்பட்டனர் என்று அறிவிக்கப்படுகின்றது.

(இ-எ)

சுபநேரம்

28-06-1987
ஞாயிற்றுக்கிழமை
சுபநேரம்:-
8.55 முதல் 10.25வரை
ராகுகாலம்:-
4.25 முதல் 5. 55 வரை
இவை பகலுக்கும்
இரவுக்கும் பொருந்தும்

டிக்ஸிற் ராஜீவைச் சந்தித்தார்

புதுடில்லி, ஜூன் 28

கொழும்பில் உள்ள இந்தியத் தூதர்திரு.ஜே. என். டிக்ஸிற் பிரதமர் ராஜீவ்காந்தியை நேற்றுச் சந்தித்தார்.

இனப்பிரச்சினை பற்றிய நிலையை பிரதமருக்கு அவர் விளக்கினார்.

அதற்கு முன்னர் திரு. டிக்ஸிற் வெளியுறவு அமைச்சர் என். டி. திவாரி, இணை அமைச்சர் நட்வர்சிங் ஆகியோரையும் சந்தித்துப் பேசினார்.

இந்தியநிவாரணஉதவி

(4 ஆம் பக்கம் பார்க்க)

இந்திய நிவாரண பொருள்கள்

யார் யாருக்குக் கிடைக்கும்?

யாழ்ப்பாணம், ஜூன் 28

இந்திய நிவாரணப் பொருள்கள் வடமராட்சி, தென்மராட்சி கோப்பாய், தெல்லிப்பளை, யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள பாதிக்கப்பட்டவர்களுக்கே வழங்கப்படும்.

முதலில் அகதி முகாம்களில் உள்ளவர்களுக்கும், அதன் பின்னர் அகதிகளாக உறவினர் வீடுகளில் தங்கி உள்ளவர்களுக்கும் நிவாரணப் பொருள்கள் வழங்கப்

(4-ஆம் பக்கம் பார்க்க)

இன்றும் விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூன் 28

இந்திய நிவாரணப் உணவுப் பொருள்கள் இன்று காலை 10 மணிக்கு கொழும்புத்துறை சுவாமியார் வீதியில் உள்ள அகதிகள் முகாமில் விநியோகிக்கப்படும்.

விநியோகத்தை மேற்பார்வை செய்ய இந்திய செஞ்சிலுவைச்சங்க அதிகாரிகளுடன், இந்தியத் தூதரக உயர் அதிகாரிகளும் கூடவருவர்.

[அ]

மருந்துப் பொதிகள் நேற்று

உத்தியோகபூர்வமாகக் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 28

இந்தியாவிலிருந்து கப்பலில் வந்த மருந்துவகைகளை இந்திய செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் யாழ் வைத்தியசாலை உயர் அதிகாரிகளிடம் நேற்று உத்தியோகபூர்வமாகக் கையளித்தனர்.

யாழ் வைத்தியசாலையிலும், யாழ் மாவட்ட பிராந்திய வைத்திய சேவை நிலையத்திலும் இவை களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்தன.

டாக்டர் விஜயராஜா, டாக்டர் நச்சினார்க்கினியன் ஆகியோரிடம் மருந்து வகைகள் அடங்கிய பொதிகள் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டன.

மருந்துப் பொதிகளைப் பெற்றுக்கொண்ட அதிகாரிகள் இருவரும் நன்றி தெரிவித்துப் பேசினர்.

(இ-ள)

✯ ஒரே குரல் பல ராகங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 28

நேற்று யாழ்ப்பாண வானொலியைக் கேட்ட பல தமிழ் அன்பர்கள் திகைப்படைந்தனர்.

மறைந்த விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்டத் தளபதி ராதாவுக்கான அஞ்சலி நிகழ்ச்சி ஒலிபரப்பப்பட்டதே மக்களைத் திகைப்படைய வைத்தது.

''தமிழ் மக்களின் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி'' ''யாழ்ப்பாண வானொலி'' ''இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் யாழ்ப்பாண நிலையம்'' எனப் பல வேடங்களைப்போடுபவர்களின் ஒரு வேடம் இதுவென மக்கள் கூறிக்கொண்டனர்.

(இ-ள)

வடக்கு - கிழக்கில் பாதிக்கப்பட்ட

சகலருக்கும் இந்திய நிவாரண உதவி தேவை

ராஜீவிடம்கூட்டணிவலியுறுத்து

சென்னை, ஜூன் 28

வடக்கு,கிழக்கு மாகாணங்களில் பாதிக்கப்பட்டுள்ள சகல தமிழருக்கும் இந்திய நிவாரண உதவி கிடைக்க ஏற்பாடு செய்யுங்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணி, பிரதமர் ராஜீவ் காந்திக்கு அனுப்பிய மகஜர் ஒன்றில் முன்கண்டவாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இராணுவ நடவடிக்கை காரணமாக வடக்கு கிழக்கு மாகாணங்களில்

(4-ஆம் பக்கம் பார்க்க)

செஞ்சிலுவை சங்க கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன்28

இந்திய நிவாரணஉணவுப் பொருள்களை விநியோகிப்பதற்கான ஏற்பாடுகளை ஆராய்வதற்காக யாழ் செஞ்சிலுவைச் சங்கத்தின் அவசர கூட்டம் இன்று நடைபெறுகிறது.

யாழ். வை. எம். சி. ஏ. மண்டபத்தில் இன்று பிற்பகல் இந்தக் கூட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

உலகில் எந்த ஓர் ஆஸ்பத்திரிக்கும் இல்லாத அனுபவம் யாழ்.ஆஸ்பத்திரிக்கு

யாழ்ப்பாணம், ஜூன்28

உலகில் எந்த ஒரு வைத்தியசாலைக்கும் கிடைக்காத யுத்த அனுபவம் யாழ். வைத்தியசாலைக்குக் கிடைத்துள்ளது.

இவ்வாறு இந்திய செஞ்சிலுவைச்சங்க பிரதிநிதி திரு. கே. வேணுகோபால் யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரிடம் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், உலகில் எந்த ஓர் ஆஸ்பத்திரிமீதும் குண்டுத் தாக்குதல் நடத்தப்படவில்லை. இராணுவ ஆஸ்பத்திரிகள் கூடத் தாக்கப்படவில்லை.

உலகிலுள்ள வைத்தியசாலைகளுக்கெல்லாம்

(4-ஆம் பக்கம் பார்க்க)

சின்னக்கடையில் நேற்று

துப்பாக்கிச் சூடு!

யாழ்ப்பாணம், ஜூன்28

யாழ் கோட்டை முகாமில் இருந்து நேற்று சின்னக்கடைப் பகுதியை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதில் நான்கு பேர் காயமடைந்தனர்.

நேற்றுக்காலை பத்து

(4-ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் வெல்லும் இன்றைய நாளிதழ்

நிவாரணம்: உடனுக்குடன்

அனுப்பப்படுகின்றன

யாழ்ப்பாணம், ஜூன் 28

இந்தியக் கப்பல்களில் இருந்து நேற்று இறக்கிய பொருள்கள் யாவும் சுன்னாகம் களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப்பட்ட பின்னர், அவ்வப்போது சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கும் அனுப்பப்பட்டு வருகின்றன.

மருந்து வகைகளை யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் சென்று பார்வையிட்டதுடன் திரு. பூரிக்கு அவர் தமது நன்றிகளையும் நேரில் தெரிவித்துக் கொண்டார். (உ-ள)

சுகாதார உதவி

வேலணை, ஜூன் 28

மண்டைதீவுப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து வேலணை சாட்டி மாதா ஆலயத்தில் தஞ்சம் புகுந்துள்ள அகதிகளுக்கு சுகாதாரம் சம்பந்தமான உதவிகளை தீவுப்பகுதி சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படை செய்து வருகின்றது. (உ-167)

மினி முகாம்களை பலப்படுத்தும் முயற்சியில் சிப்பாய்கள்

ஏராளமான தென்னை, பனை தறிப்பு

வல்வெட்டித்துறை ஜூன் 28

சமீபத்திய வடமராட்சித் தாக்குதலின் போது இராணுவத்தால் அமைக்கப்பட்ட முள்ளி, மண்டான், நல்லியடி மத்திய மகா வித்தியாலய மினி முகாம்கள் பலப்படுத்தப்பட்டு வருகின்றன.

இதனால் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்துக்குச் சமீபமாக உள்ள வீடுகளின் உரிமையாளர்கள் அச்சம் கொண்டுள்ளனர்.

வல்வெட்டித்துறை இராணுவ முகாமுக்கு அருகில் இருந்த வீடுகளின் நிலைமையே தமது வீடுகளுக்கும் ஏற்படலாம் என்று இவர்கள் அஞ்சுகின்றனர்.

இராணுவம் மினி முகாம்களைப் பலப்படுத்துவதால் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தின் எதிர்காலம் கேள்விக் குறியாக இருந்து வருகிறது.

அங்கு ஆசிரியர்கள் சென்று கையொப்பம் இட்டு வந்தாலும் மாணவர்களை அனுப்புவதற்கு பெற்றோர் தயங்குகின்றனர்.

மினி முகாம்களைப் பலப்படுத்தும் வேலையில் ஈடுபட்டுள்ள இராணுவத்தினர் வடமராட்சியில் பெரும் தொகையான பனைகளையும் தென்னைகளையும் தறித்து வருகிறார்கள்.

இந்தச் செயலை அரச அதிபராவது தடுத்து நிறுத்த வேண்டும் என்று இப்பகுதிப்பொதுமக்கள் வேண்டுகின்றனர். (இ-160)

மட்டக்களப்பில் தீவிர பாதுகாப்பு

கொழும்பு, ஜூன் 28

மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரமாக்கப்பட்டுள்ளன.

விசேட அதிரடிப் பொலீஸ் படையினர் இப்பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

விரைவில் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தலை தீவிரவாதிகள் குழப்பக் கூடும் என்ற தகவல்-

நிலக்கண்ணி வெடித் தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்து வருவது-

ஆகியவை காரணமாகவே பாதுகாப்புநடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. (உ-ஐ-எ)

வீடுகளைப் பார்க்கப் போய் ஏமாற்றத்துடன் திரும்பும் மக்கள்

காங்கேசன்துறை, ஜூன் 28

திடீர் ஊரடங்கு அறிவித்தலையடுத்து வலி-வடக்குப் பகுதியிலிருந்து அவசர அவசரமாக வெளியேறிய ஆயிரக்கணக்கான குடும்பங்கள் கடந்த 3 வாரங்களாகத் தமது வீடுகள், தொழில் ஸ்தலங்கள், தோட்டங்கள், கால்நடைகள் முதலிய உடைமைகளைச் சென்று பார்வையிட முடியாது தவிக்கின்றனர்.

கடந்த 7ஆம் திகதி விடுக்கப்பட்ட திடீர் ஊரடங்கு அறிவித்தலால் வலி வடக்குப் பகுதியில் உள்ள பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த மக்கள் உடுத்த உடுப்புடன் உயிரைக் காப்பாற்ற ஓடிச்சென்று வெவ்வேறு இடங்களில் தஞ்சம் புகுந்தனர். இவர்கள் தமது உடைமைகள் பாதுகாப்பாக இருக்கிறதா என்பதைப் பார்வையிடும் ஆர்வத்தினால் தினமும் தெல்லிப்பழை வரை சென்று காத்திருந்துவிட்டு அனுமதி கிடைக்காததால் ஏமாற்றத்துடன் திரும்புகின்றனர்.

இதேவேளை யாழ் வானொலி புதன் காலை விடுத்த அறிவிப்பில் மாவிட்டபுரம், வீமன்காமம், தெல்லிப்பளை, கீரிமலைப் பகுதிகளில் மக்கள் மீண்டும் வந்து தமது வீடுகளில் குடியேறலாம் எனத் தெரிவித்ததால் இதைநம்பி அப்பகுதி மக்கள் பலர் புதனன்று அங்கு சென்றனர்.

ஆனால் அவர்களை 'ஷெல்' தாக்குதலும், துப்பாக்கிப் பிரயோகமும் இடம்பெற்றதால் பீதியுடன் திரும்பி ஓட்டமெடுத்தனர்.

மாவிட்டபுரம் சந்திக்கு அண்மையில் அவர்கள் சென்றபோது சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதுடன் தெல்லிப்பளைப்பக்கம் நோக்கி 'ஷெல்' தாக்குதலும் இடம்பெற்றது. (உ-68)

MEDICAL LABORATORY TECHNOLOGIST

Vacancy exists for a full time Medical Laboratory Technologist. Salary not less than Rs. 1000/- per month negotiable Bio Data to:

DIRECTOR
Maternity and Nursing Home,
Market Square,
Chankanai.

(1446)

LONDON EXAMS

NOV. / DEC. 87

C. I. M. A. — Stage I, II & III.
I. D. P. M. — Parts I & II
A. A. T. & I. A. B. — All Stages

✶ ஆரம்பம்: 27 - 06 - 1987 ✶

The Result Oriented Institute in North

North Ceylon Technical Institute

14, St. Peter's Lane, JAFFNA.

குறிப்பு:- சூழ்நிலைக்கேற்ப பாதுகாப்பான இடத்தில் வகுப்புக்கள் நடத்தப்படும்.

(3212)

சில பல நோ. கூ. ச. கிளைகளில்

நிவாரண உணவு வழங்குவதில் குளறுபடி

பலாலி, ஜூன் 28

வடக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கம் வழங்கும் நிவாரண உணவுப் பொருள்களை விநியோகிப்பதில் சில இடங்களில் குளறுபடிகள் நடப்பதாகப் புகார் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

உணவுப் பொருள்களை வழங்கும் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க கிளைகள் சிலவே இக்குளறுபடி வேலைகளைச் செய்கின்றனவாம்.

உதவி அரசாங்க அதிபரினால் வழங்கப்படும்பண உறுதிச் சீட்டுக்களைப் (வவுச்சர்) பெற்றுக்கொண்டு உணவு மற்றும் பொருள்களை வழங்குவதில்தான் குறைபாடுகள் நிலவுகின்றன.

மக்கள் விரும்பிக் கேட்கும் பொருள்களை மறைத்து வைத்துக் கொண்டு அவற்றைக் கொடுக்காமல், தாம் விரும்பும் பொருள்களை மட்டும் சில கிளைகளின் முகாமையாளர்கள் பொதுமக்கள் மீது கட்டியடிக்கின்றனர்.

சில கிளைகளில் பழுதடைந்த வெள்ளையரிசியையும், சீனியையும் மட்டுமே வழங்கமுடியும் என்று கூறும் முகாமையாளர்கள், அது அரச அதிபரின் உத்தரவு என்றும் தெரிவிக்கிறார்களாம்.

குழந்தைகளுக்கு அத்தியாவசியமானதாகக் கருதப்படும் பால்மா உணவை வழங்குவதற்கும் சில முகாமையாளர்கள் மறுக்கின்றனராம்.

ஆனால் அவற்றைத் தமக்கு வேண்டியவர்களுக்கு அவர்கள் விநியோகிக்கிறார்கள் என்றும் புகார் கூறப்படுகிறது. (உ-119)

அவசரகால சட்டம் நீடிப்பு

கொழும்பு, ஜூன் 28

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிக்கும் பிரேரணை நாடாளுமன்றத்தில் 96 மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது.

ஆதரவாக 107 வாக்குகளும் எதிர்த்து 11வாக்குகளும் கிடைத்தன.

சுதந்திரக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி எம்.பிக்கள் எதிர்த்து வாக்களித்தனர். (இ.எ)

ஸ்ரீலங்காவில்

இந்தியத் தலையீடு வல்லரசுகளின் மோதலிலேயே முடிவடையும்

அமெரிக்க பத்திரிகை கருத்து

வாஷிங்டன், ஜூன் 27

ஸ்ரீலங்காவில் இராணுவ ரீதியில் தலையிட ராஜீவ் காந்தி நிர்ப்பந்திக்கப்பட்டால், அது இரண்டு வல்லரசுகளையும் மோதலுக்குள் இழுத்து விடுவதில் முடியும்.

அமெரிக்காவில் வெளியாகும் 'பொஸ்டன் குளோப்' பத்திரிகை இப்படிக் கருத்து வெளியிட்டது.

''ஸ்ரீலங்காவில் இரத்த வெள்ளம்'' — என்ற தலைப்பில் வெளியான ஆசிரியர் தலையங்கத்தில் இது தெரிவிக்கப்பட்டது.

பிராந்திய ரீதியிலான தலையீடு, வல்லரசுகளின் தலையீட்டுக்கு வழிவகுக்கலாம்.

ஸ்ரீலங்காவின் துறைமுக வசதிகள் அமைந்துள்ள கேந்திர முக்கியத்துவம் பற்றி வாஷிங்டனும் மாஸ்கோவும் உணர்ந்து உள்ளன.

கேந்திர முக்கியத்துவம், தார்மீகம் ஆகிய காரணங்களை முன்வைத்து வாஷிங்டன் தனது செல்வாக்கைப் பயன்படுத்தி ஸ்ரீலங்காவில் இரத்த ஆறு ஓடுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

முதல் கட்டமாக யுத்த பிராந்தியத்தினுள் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் செல்வதற்கு திரு. ஜெயவர்த்தன அனுமதி வழங்கவேண்டும்.

[illegible] லை உறுதி செய்வதன் மூலம் நாட்டின் ஒற்றுமையைப் பாதுகாக்க சமஷ்டி அரசமைப்பு ஒன்றை அமுல் நடத்த மத்திய அரசை அமெரிக்கா தூண்ட வேண்டும்.

விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல், ஹெலிக்கொப்டர் தாக்குதல்களைத் தொடர்வதையும் தமிழர்கள் கோரும் சுயாட்சி மற்றும் உரிமைகளை தூக்கி எறிவதையும் திரு. ஜெயவர்த்தன தொடருவாரானால், இந்தியாவில் உள்ள 5 கோடி தமிழர்களையும் சாந்தப்படுத்தும் நடவடிக்கையை எடுக்க ராஜீவ்காந்தி நிர்ப்பந்திக்கப்படுவார்.''

[illegible] ஆசிரியர் தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது. (இ-எ)

சடலம் ஒதுங்கியது

வேலணை, ஜூன் 28

நயினாதீவு தெற்கு கடற் கரையில் 25 வயது மதிக்கத்தக்க ஆணின் சடலம் ஒன்று கடந்த வாரம் கரை ஒதுங்கியது.

சடலத்தின் நாக்கு துண்டாகியிருந்தது. அத்துடன் தலையிலும், முகத்திலும் அசிற்பட்டு தலைமயிர் இன்றி எரிந்திருக்கக் காணப்பட்டது. சடலத்தின் அரையில் ஒரு திறப்புக் கோர்வையும் இருந்தது. (உ-167)

சமீபத்தில் நடந்த இராணுவத் தாக்குதல்களின்போது தெல்லிப்பளை யூனியன் கல்லூரியும் சேதம் அடைந்தது. சேதம் அடைந்த கட்டடங்களின் ஒரு பகுதியையே படத்தில் காண்கிறீர்கள்.

படம்: ஜெயம்

19,430 அப்பாவித் தமிழர்கள் இதுவரை உயிரிழப்பு

புலிகள் பிரமுகர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜூன்28

தமிழீழ போராட்டத்தில் 17 ஆயிரம் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு சிறைமுகாம்களில் சித்திரவதை அனுபவிக்கின்றனர். 20 ஆயிரம் தமிழர்கள் தமிழீழ போராட்டத்தில் உயிர் இழந்துள்ளனர். இவர்களில் 570 பேர் மட்டுமே போராளிகள் .

தமிழீழ விடுதலைப்புலிகள் பிரமுகர் மூர்த்தி யாழ்ப்பாணத்தில் பொதுக் கூட்டமொன்றில் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்— 19 ஆயிரத்து 430 தமிழர்கள் போராட்டத்தில் எந்த வித ஈடுபாடுமின்றி வீணே இறந்துள்ளனர்.

இவர்கள் போராட்டத்தில் பங்களித்துப் போராளிகளாக தியாகிகளாக இறந்திருப்பின் இந்நேரம் தமிழீழம் கிடைத்திருக்கும்.

இத்தனை அழிவுகளுக்குப் பின்பும், இன்னமும் மக்கள் உணர்வு பூர்வமாக பங்களிக்க முன்வரவில்லை.

இந்நிலை மக்களை மென்மேலும் அழிவிற்கே இட்டுச் செல்லும்—

வடமராட்சி அசம்பாவிதங்களைத் தொடர்ந்து நாம் இன்னும் பலமடைந்துள்ளோம். பெரும் எண்ணிக்கையானோர் எமது இயக்கத்தில் சேர்ந்த வண்ணமுள்ளனர்.

எமது முழு நிலமும் பறிபோனாலும் நாம் ஒடி ஒளிக்கமாட்டோம்.

இறுதிவரை போராடியே தீருவோம்.

இவ்வாறு அவர் கூறினார். (இ-ள)

கேள்விப்பட்டதைவிட இங்கே அதிக கஷ்டம்

என்கிறார் செஞ்சிலுவைச்சங்க அதிகாரி

யாழ்ப்பாணம், ஜூன் 28

இராமேஸ்வரத்திலுள்ள தமிழ் அகதிகள் கூறியவற்றைவிட அதிகளவு கஷ்டத்தை தமிழ் மக்கள் இங்கே அனுபவிப்பதை நாம் நேரில் பார்த்தோம்.

இந்திய செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி திரு. கே. வேணுகோபால் எமது செய்தியாளரிடம் இவ்வாறு கூறினார்.

இந்தியாவுக்கு வந்துள்ள தமிழ் அகதிகள் தமது கஷ்டங்களை எம்மிடம் கூறியபோது நாம் அவர்களது கஷ்டங்களை அதிகம் புரிந்து கொள்ளமுடியவில்லை என்றும் அவர் கூறினார். (இ-ள)

பத்திரிகைத் தாள் விலையில் உயர்வு

கொழும்பு, ஜூன் 28

உலக சந்தையில் பத்திரிகை அச்சடிக்கும் தாள் விலை ஐம்பது வீதமாக அதிகரித்து உள்ளது.

இவ்வாண்டின் முதல் ஆறு மாதங்களிலும் இவ் விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

வட அமெரிக்கா, தென்னாபிரிக்கா, சுவீடன், பின்லாந்து, நோர்வே, யூகோஸ்லேவியா உற்பத்தியாளர்கள் ஒரு மெற்றிக்தொன் பத்திரிகைத் தாளை ஜனவரி மாதத்தில் 400 அமெரிக்க டாலருக்கு விற்றனர்.

ஆனால் பின்னர் அவ் விலையை 600 அமெரிக்க டாலராக அதிகரித்து உள்ளனர்.

பத்திரிகை நிறுவனங்கள், வெளியீட்டாளர்களின் தேவைகள் அதிகரிப்பினால் உலக சந்தையில் பத்திரிகைத் தாளுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது.

இதனால் தற்போது ஒரு மெற்றிக் தொன்னின் விலை 650 அமெரிக்க டாலராகவும் அதிகரித்துள்ளது.

மூன்றாவது உலக நாடுகளின் தரம் குறைந்த பத்திரிகைத் தாள்களும் இப்போது கிடைப்பதாயில்லை.

ஸ்ரீலங்காவில் பத்திரிகைத் தாளுக்கான சுங்க வரி 5 சதவீதத்தில் இருந்து 10 சதவீதமாக உயர்த்தப்பட்டிருப்பதால் பத்திரிகைத் தாளின் விலையில் மேலதிக உயர்வுகண்டுள்ளது. (அ-க)

குண்டு தயாரித்த சிங்களப் பெண்கள்

கொழும்பு, ஜூன் 28

குறிப்பிட்ட நேரத்தில் வெடிக்கும் குண்டுகளைத் தயாரித்துக்கொண்டிருந்தனர் என்று கூறப்படும் இரண்டு சிங்களச் சகோதரிகளை கண்டிப் பொலீஸார் கைது செய்தனர்.

கண்டியில் உள்ள மகளிர் கல்லூரி ஒன்றின் பரிசளிப்பு விழாவின் போது வெடிக்க வைப்பதற்காக இக் குண்டுகள் தயாரிக்கப்பட்டன என்று பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

கைது செய்யப்பட்ட இரண்டு சகோதரிகளும் சிங்களவர்கள். மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர்கள் இவர்கள் என்றும் கூறப்படுகின்றது. (உ-எ)

தொண்டர்களுக்கு பயிற்சி

வேலணை, ஜூன் 28

அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாசாலையில் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ்படைப்பிரிவு தொண்டர்களுக்கான பயிற்சி வகுப்பும், கருத்தரங்கும் நடத்தப்பட்டது.

தீவுப்பகுதி சென் ஜோனஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவு பொறுப்பாளர் சிவன்-இளங்கோ தலைமைவகித்தார்.

இப்பயிற்சி வகுப்பில் வெளிவாரிப் பிரிவுத் தொண்டர்கள் பலரும் பங்குகொண்டனர். (உ-167)

பத்திரிகையாளர் விசா பெறவில்லை

யாழ்ப்பாணம், ஜூன்28

இந்திய பத்திரிகையாளர்கள் இலங்கை கடற்பிராந்தியத்தினுள் வர மட்டுமே விசா பெற்றிருந்தனர்.

இந்தியக் கப்பல்கள் நிவாரணப் பொருள்களை கொண்டுவந்து இறக்குவதை பார்வையிட மட்டுமே அவர்கள் இலங்கை அரசிடம் அனுமதி கோரியிருந்தனர்.

யாழ் குடா நாட்டிற்குள் வருவதற்கு அவர்கள் அனுமதி ஏதும் கேட்கவில்லை.

-இவ்வாறு இந்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-ள-10)

சங்கீத சபையின் அறிமுறைப் பரீட்சை ஜூலை 18-19 இல்

வட இலங்கைச் சங்கீத சபையின் அறிமுறைப் பரீட்சைகளை ஜூலை 18ஆம் 19ஆம் திகதிகளில் (சனி, ஞாயிறு) நடத்துவதென ஏகமனதாகத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

வட இலங்கைச் சங்கீத சபையின் பரீட்சைச் சபைக் கூட்டம் யாழ். கல்வித்திணைக்களத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை 9-30 மணி அளவில் யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளரும் வட இலங்கைச் சங்கீத சபைத் தலைவருமான ஜனாப் எம். எம். மன்சூர் தலைமையில் நடைபெற்றது.

அப்போதே மேற்காணும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள இதர தீர்மானங்கள் வருமாறு:

★ ஜூன் 6ஆம், 7ஆம் திகதிகளில் நடைபெறவிருந்து பின் போடப்பட்ட அறிமுறைப் பரீட்சையை ஜூலை 18ஆம்; 19ஆம் திகதிகளில் (சனி, ஞாயிறு) நடத்துவது.

★ வடமராட்சிப் பகுதியில் முன்பு தெரிவு செய்யப்பட்ட பரீட்சை நிலையங்களான நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம் ஆகியவற்றில் பரீட்சைகள் நடைபெறமாட்டா.

இப் பரீட்சார்த்திகளுக்கு சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலயத்தில் பரீட்சைகள் நடைபெறும்.

★ இடம் பெயர்ந்த பரீட்சார்த்திகள் தங்களுக்கு வசதியான பரீட்சை நிலைய மேற்பார்வையாளருடன் அனுமதிப் பத்திரத்துடன் தொடர்புகொண்டு பரீட்சையை எடுக்கலாம்.

மாற்றம் தொடர்பாக காரியாலய அனுமதி அவசியமில்லை (இ-161)

A L
போட்டிப் பரீட்சை

29.06.87 திங்கள் 1.30 பி.ப விலங்கியல்
,, ,, பிரயோக கணிதம் i
30.06.87 செவ்வாய் ,, தாவரவியல்
,, ,, பிரயோககணிதம் ii
01.07.87 புதன் ,, 8.30 மு.ப.
,, தூய கணிதம் i
1.30 பி.ப. பௌதிகவியல்
02.07.87 வியாழன் 8.30 தூயகணிதம் ii
பி. ப. 1.30 இரசாயனம்

அமைப்பாளர்
திறன் ஆய்வு நிறுவனம்
(1446)

உதய சங்கற்பம்

தேவனை ஒருவரும் ஒருபோதும் கண்டதில்லை; நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்பு கூர்ந்தால் தேவன் நமக்குள் நிலைத்திருக்கிறார்; அவருடைய அன்பும் நமக்குள் பூரணப்படும்.

—பைபிள்

உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 24805 22073
28.6.1987
த.பெ.இல: - 23

நல்லெண்ணத் தூதுவர்களே! நற்பணி செய்வீராகுக!!

அல்லலுறும் ஈழத் தமிழர்களுக்கு இந்தியா வழங்கும் நிவாரணப் பொருள்களில் முதற் பகுதி, குடாநாடு வந்து சேர்ந்து விட்டது.

நிவாரணப் பொருள்களை இறக்குவதையும், பங்கிடு செய்வதையும் மேற்பார்வையிட வந்த இந்திய அதிகாரிகளுக்கு அவர்கள் சென்ற இடம் எல்லாம் எமது மக்கள் மனமுவந்து, குதூகல வரவேற்பு அளித்தார்கள். இதுவரை தங்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்களை எடுத்து உரைத்தார்கள். ஸ்ரீலங்கா இராணுவத்தின் அடக்கு முறையில் தாம் அனுபவித்த அட்டுழியங்களை எடுத்து உரைத்தார்கள். மக்களுக்கு ஏற்பட்ட உயிர், உடைமை இழப்புகளை எடுத்துரைத்தார்கள். தமிழ் மண் மானபங்கப்படுத்தப்பட்டு அதன் மகிமை மசிக்கப்பட்டிருப்பதை வார்த்தைகளால் மட்டுமன்றி நேராலும் காண்பித்தார்கள்.

உணவு தந்ததற்கு நன்றி கூறுகிறோம்; பாராட்டுகிறோம். அதைப் போலவே எங்கள் உயிருக்கு உத்தரவாதம் அளிக்கவும் ஏற்பாடு செய்யுங்கள். ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் மிருகத்தனம் மிகுந்த ஆயுதப்படைகளின் அசுரத்தனத்தால் எமக்கும் எமது மண்ணுக்கும் உயிராபத்து உண்டு. அந்த அசுரத்தனங்களை அழிக்க வல்ல தேவராக நீங்கள் மாறவேண்டும். எங்கள் உரிமைப் போராட்டத்தை அங்கீகரிக்க வேண்டும். எங்களை அழிவிலிருந்து காப்பாற்றும் விதத்தில் எமக்கு எல்லா வகைகளாலும் உதவவேண்டும். இழந்தசுதந்திரத்தை மீளப் பெறுவதற்காகத் தீரத்துடன் போராடும் தமிழ்ப் போராளிகள் இயக்கங்களை அங்கீகரித்து அவர்களுக்குப் பக்கத் துணையாக நில்லுங்கள் — என்றும் குடாநாட்டு மக்கள் இந்தியப் பிரதிநிதிகளிடம் விண்ணப்பித்தார்கள்.

ஈழத் தமிழர் படும் இன்னல்களை, அவர்கள் வாழ்க்கையின் ஓரத்துக்கே தள்ளப்பட்டிருக்கும் இக்கட்டான நிலைமைகளை, தமிழர்கள் நாளாந்தம் அழிக்கப்படுவதை, தமிழ் மண் நிர்மூலமாக்கப்படுவதை நேரில் காணும வாய்ப்பு இந்திய அதிகாரிகளுக்கு நீண்ட காலமாக இருக்கவில்லை.

இப்போது அவர்களுக்கு அந்த வாய்ப்புக் கிடைத்துவிட்டது. ஆகையால் அவர்கள் ஈழத் தமிழர் நிலையை, இந்திய அரசாங்கத்துக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். அவர்களுக்கு உதவ வேண்டியதன் அவசியத்தை மேலிடத்துக்கு எடுத்தியம்ப வேண்டும்.

குடாநாட்டு மக்கள் தமக்கு அளித்த வரவேற்பை, நிவாரண உதவிப் பொருள்கள் வழங்கியதற்கான நன்றி உபசாரமாக மட்டும் கருதிவிடக் கூடாது.

இனியும் எனக்கு மீட்சி உண்டா? அது எப்போது கிடைக்கும்? அதனை யார் பெற்றுத் தருவார்? என்றுகும்மிருட்டில் திக்கற்று நிற்கும் ஒருவன் விடி வெள்ளியைக் கண்டதும் புது உலகைக் கண்டவன் போல் உள்ளக் களிப்பு அடைவது இயல்பு.

அதே போல, வாழ்வா சாவா என்ற நிலையில் இருக்கும் தமிழர்களுக்கு இந்தியநிவாரண உதவியும், இங்கு வந்த இந்திய அதிகாரிகளும் விடிவெள்ளிகளாகவே இருக்கின்றனர் எனலாம்.

தமது எதிர்கால சுபீட்சத்துக்கு, சுதந்திரத்தை வென்றெடுப்பதற்கு இந்தியா உதவும் என்ற நம்பிக்கையின் பிரதிபலிப்பே குடாநாட்டு மக்கள் தமக்கு அளித்த வரவேற்பு என்பதை இந்தியப் பிரதிநிதிகள் நிச்சயம் உணர்வார்கள் என நம்புகிறோம்.

ஈழத்தமிழர்— இந்திய மக்கள் உறவில் பெரும் ஆக்க பூர்வமான மாற்றங்கள் வரும் என்பதற்கு கட்டியம்கூறுவதாயும் குடாநாட்டு மக்கள் தமக்கு அளித்த வரவேற்பு அமையும் என்பதையும் இந்தியப் பிரதிநிதிகள் உணர்வார்கள் என நம்புகிறோம்.

தமிழ் மக்களின் நம்பிக்கை வீண் போகாமல் அல்லது அவர்கள் ஏமாற்றம் அடைந்து விடாமல், அவர்களின் உணர்வுகளை இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும், அரசாங்க மேலிடத்துக்கும் இங்கு வந்துள்ள பிரதிநிதிகள் சரிவர எடுத்துரைப்பார்கள் என்ற முழு நம்பிக்கையும் மக்களுக்கு உண்டு.

தாம் விடுத்த வேண்டுதலை நல்லெண்ணத் தூதுவர்களாக எடுத்துச் சென்று மேலிடத்துக்குச் சமர்ப்பிப்பார்கள் என்றே தமிழ் மக்கள் நம்புகிறார்கள்.

ஈழத் தமிழ் மக்களின் உணர்வுகளை மட்டுமன்றி, அவர்கள் தெரிவித்த தூதினை மட்டுமன்றி—

இந்தியாவின் பக்கம் நிற்பதற்காக, குடாநாட்டு மக்களைப் பழிவாங்குவதற்கு ஸ்ரீலங்கா அரசு காத்திருக்கும் என்பதையும்—

பழிவாங்கல் நடவடிக்கை எந்த நேரத்திலும், எந்த வடிவத்திலும் வரலாம் என்பதையும்—

இந்தியப் பிரதிநிதிகள் – நல்லெண்ணத் தூதுவர்கள் தூரதிருஷ்டியுடன் நோக்க வேண்டும். அது குறித்தும் தமது மேலிடத்துக்கு எடுத்து உரைக்க வேண்டும் என்று குடாநாட்டு மக்கள் சார்பில் நாம் கேட்டுக்கொள்கிறோம்.

2 விஷயங்கள் தவிர ஏனையவை குறித்து பேச ஜோதிபாசு தயார்

புதுடில்லி, ஜூன் 27

கூர்க்காலந்து அமைப்பது, மேற்கு வங்காளத்தைத் துண்டு போடுவது— இந்த இரண்டு விஷயங்களையும் தவிர ஏனையவை குறித்து பேச்சுக்கள் நடத்த எனது அரசு தயாராக உள்ளது.

இப்படி மேற்கு வங்காள அரசு முதலமைச்சர் ஜோதிபாசு தெரிவித்தார்.

பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்திய பின்னர் திரு. பாசு செய்தியாளர் மாநாட்டில் பேசினார்.

அப்போதே இதனை அவர் தெரிவித்தார்.

மாநில அரசின் நிலைப்பாட்டை மத்திய அரசும் ஏற்றுக் கொண்டுள்ளது என்றும் திரு பாசு தெரிவித்தார்.

இதனிடையில் கூர்க்காலந்து தேசிய விடுதலை முன்னணி நடத்தும் பதின்மூன்று நாள் வேலை நிறுத்தம் இன்றுடன் 8 ஆவது நாளாக நடந்தது.

வன்செயல்கள் டார்ஜீலிங்கில் இடம் பெற்றுலும், நிலைமை சீரடைந்துள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

முதலமைச்சர் பாசு உள்துறை அமைச்சர் பூட்டாசிங்குடன் பேச்சுக்கள் நடத்தினர்.

(இ-எ)

கின்னஸ் சாதனை!

சென்னை, ஜூன்27

கடலூர் ஜெயராமன் பேசியே கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்று விட்டார்.

கின்னஸ் நிறுவன உதவி இயக்குநர் திரு. ஸ்மித் சாதனை நிகழ்த்தியதற்கான சர்டிபிக்கட்டை திரு. ஜெயராமனுக்கு அனுப்பி வைத்திருக்கிறார்.

கடந்த பெப்ரவரி 3 ஆம் திகதி பேசத் தொடங்கி பெப்ரவரி 11 ஆம் திகதிவரை– 200 மணித்தியாலங்கள்— மூச்சு விடாமல்பேசினர்.

அரசியலில் இருந்து ஆத்மீகம் வரை சகல விஷயங்களையும் அப்போது அவர் பேசி முடித்தார்.

இது ஓர்உலக சாதனை. அதற்காகவே கின்னஸ் புத்தகத்தில் ஜெயராம் இடம் பெற்று விட்டார்.

(இ-எ)

வள்ளலார் நூல்கள் ஆங்கிலத்தில்

மதுரை, ஜூன் 27

வள்ளலார் நூல்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட வுள்ளன.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் இப்பணியில் ஈடுபடும்.

சித்திரவதை சட்டவிரோதம்

ஐ.நா.பிரகடனம்

ஐ. நா. ஜூன் 27

சித்திரவதை செய்வதை முதல் தடவையாக ஐ.நா. சட்டவிரோதமாக்கியுள்ளது.

நேற்று முதல் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டு உள்ள ஐ.நா. ஆதரவிலான மனித உரிமை சாசனம் இதனை அறிவித்துள்ளது.

இதன்படி சித்திரவதை செய்வதைத் தடுக்கும் சட்டத்தை ஒவ்வொரு நாடும் இயற்ற வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எக்காரணங் கொண்டும் சித்திரவதை செய்வதை அரசுகள் நியாயப்படுத்த முடியாது.

யுத்தம், யுத்தப் பயமுறுத்தல், அரசியல் வன்முறை ஆகிய காரணங்களைக் காட்டி எந்த அரசும் சித்திரவதை செய்வதை நியாயப்படுத்துவதை புதிய சாசனம் தடை செய்துள்ளது.

புதிய விதியை 21 நாடுகள் ஏற்றுள்ளன.

பாதுகாப்பில் உள்ள கைதிகள் மீது சித்திரவதை செய்யப்படக் கூடாது என்பதைத் தங்கள் ஆயுத, பொலீஸ் படைகளுக்கு போதிக்க இந்த 21 நாடுகளும் உடன்பட்டுள்ளன.

இன்னும் 43 நாடுகள் புதிய விதியை அங்கீகரிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன. (இ-எ)

பஸ் விபத்தில் 18 பேர் பலி!

வெளி உலகில்

பஸ் விபத்து ஒன்றில் பதினெட்டுப் பயணிகள் உயிரிழந்தனர்.

இச்சம்பவம் ஜம்முவில் இருந்து 170 கிலோ மீட்டர் தொலைவில் கடந்த வெள்ளி இடம் பெற்றது.

ஸ்ரீ நகரில் இருந்து புதுடில்லி நோக்கிச் சென்று கொண்டிருந்த உல்லாசப் பயணிகள் பஸ் ஒன்றே ஆயிரம் அடி பள்ளத்தாக்கில் விழுந்தது.

பஸ் விபத்தில் சிக்கிய பயணிகளைக் காப்பாற்றுவதில் ஹெலிக்கொப்டரின் உதவி நாடப்பட்டது. (இ-எ)

பக்கிங்ஹாமிலும் மாமி - மருமகள் லடாய்!

லண்டன், ஜூன் 27

மாமி, மருமகள் சண்டைக்கு பக்கிங்ஹாம் அரண்மனையும் விலக்கல்ல!

எலிஸபெத்மகாராணி அண்மையில் இரு மருமக்களுக்கு விடுத்த கண்டிப்பான உத்தரவு இதனை வெளிப்படுத்தியுள்ளது.

வேல்ஸ் இளவரசி, யோர்க் கோமகள் இருவரும் மகாராணியின் மருமகள்கள்.

இவர் பொது வைபவங்களுக்கு செல்லும் போது அதிகம் பேருக்கு முத்தம் கொடுக்கின்றார்களாம்.

இளைஞர்களுடன் கிண்டல் பண்ணுகிறார்களாம்.

போகக்கூடாத கிளப்புக்களுக்குள் நுழைகின்றார்களாம்.

''இவை எல்லாம் உங்கள் அந்தஸ்துக்கு ஏற்றவை அல்ல. தவிர்த்துக் கொள்ளுங்கள்'' —இப்படி மகாராணியார் (மாமி) இளவரசிகளுக்கு (மருமக்கள்) கண்டிப்பான உத்தரவு இட்டுள்ளார்.

இப்படி பிரபல ஞாயிறு இதழ் 'தமெப்பிள்' செய்தி வெளியிட்டுள்ளது,

வீட்டுக்கு வீடு வாசல் படி தான்!

(இ-எ)

நிரபராதி என்கிறார் வால்ட்ஹெய்ம்

அம்மான், ஜூன் 27

நான் நிரபராதி. அதை நிரூபிக்க இன்னும் இரண்டு வாரங்களில் புத்தகம் ஒன்றை வெளியிடுவேன்.

இப்படி ஆஸ்திரிய ஜனதிபதி குர்ட் வால்ட்ஹெய்ம் தெரிவித்தார்.

ஜோர்தான் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் திரு. வால்ட்ஹெய்ம் இதனைத் தெரிவித்தார். (இ-எ)

வெங்கடேஸ்வரன் இந்துஜா நிறுவனத் தலைவர்

புதுடில்லி, ஜூன் 27

இந்தியாவின் முன்னாள் வெளியுறவுச் செயலாளர் திரு. ஏ. பி. வெங்கடேஸ்வரன் இந்துஜா நிறுவனத்தின் தலைவராக நியமிக்கப் பட்டிருக்கின்றார்.

இந்துஜா, ஒரு தொண்டர் நிறுவனம்.

ஆஸ்பத்திரிகள், பாடசாலைகள், சமூகநலத் திட்டங்கள் முதலியவற்றை இது நிர்வகித்து வருகின்றது. (இ-எ)

பயங்கரவாத தடுப்புச் சட்டத்துடன்

தமிழரை அழித்து ஒழிக்கும் கொள்கை முழுவேக அமுல்

இந்தியப் பிரதிநிதிகளிடம் ஈழவர் முன்னணி மகஜர்

யாழ் வந்திருந்த இந்திய அரசுப் பிரதிநிதிகளிடம் ஈழவர் முன்னணி கையளித்த மகஜரின் முதலாவது பகுதி இங்கு பிரசுரமாகின்றது.

இராணுவ அரசியல் ரீதியாக ஸ்ரீலங்காவில் உள்ள தமிழர்கள் அடைந்துவரும் இன்னல்கள், துன்பங்கள் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள்.

எமது இனத்தின் தனித்தன்மை படிப்படியாகப் பறிக்கப்பட்டு வருகின்றது.

எப்படியாயினும் 1983 முதல் 1987 வரை எப்படி நாம் அரசியல் ரீதியில் அடக்கு முறைக்கு ஆளானோம், எப்படி இராணுவ நடவடிக்கையினுல் பாதிக்கப்பட்டோம் என்பதை உங்கள் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகின்றோம்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் நாம் எமது சொந்த மண்ணிலேயே அகதிகளாக்கப்பட்டோம்.

வெளிநாடுகளிலும் எம்மவர் அகதிகளாகச் சென்றுள்ளனர். தமிழ் அகதிகளின் நிலை பரவலாகத் தெரியவரவில்லை.

அரசியல் ரீதியில்

முதலாவதாக, அரசியல் பாரபட்ச நடவடிக்கைகளினுல் எப்படிப் பாதிக்கப்பட்டோம் என்பதை அறியத்தருகின்றோம்.

இந்த நூற்றுண்டின் ஆரம்பத்தில் எமது அரசியல் அடித்தளம் தாக்கப்பட்டது.

1936 இல் தான் சிங்களத் தீவிர அமைச்சரவை பதவிக்கு வந்தது. அமைச்சரவையின் முக்கிய உறுப்பினரான பாரன் ஜெயதிலக அப்போது தனிச்சிங்களம் கொள்கையை முன்வைத்து வாதாடினர்.

பாரன் ஜெயதிலக ஒரு முறை சொன்னர். 'முழுச் சிங்கள அமைச்சரவையின் நோக்கம் இந்த நாட்டின் ஆளும் வர்க்கம் சிங்களவர் என்பதை நிலைநாட்டுவதே. எம்மால் வழங்கப்படும் சலுகைகளைப் பெற்றுத் தமிழர்கள் வாழ வேண்டும். எம்மால் அவர்கள் ஆளப்பட வேண்டும்'—

அந்த முழுச்சிங்கள அமைச்சரவை தமிழரை அழித்து ஒழிக்கும் நடவடிக்கையைப் படிப்படியாக எடுத்து வந்தது.

முதலில், நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பான தமிழ்த் தோட்டத் தொழிலாளரின் குடியுரிமை பறிக்கப்பட்டது.

உள்ளூராட்சித் தேர்தலில் அவர்கள் போட்டியிட முடியாதபடி தடை செய்யும் சட்டம் 1937 இல் கொண்டு வரப்பட்டது.

1948 இல் நாடு சுதந்திரம் பெற்றது. 1949 இல் விசேஷ பிரசா உரிமைச் சட்டம் கொண்டு வரப்பட்டது. வாக்குரிமை, மற்றும் குடியுரிமைகள் தமிழ் தொழிலாளரிடமிருந்து பறிக்கப்பட்டன. இதன் பலனாக தோட்டத் தமிழ்த் தொழிலாளர் நாடற்றவர்களாயினர்.

எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றியது போன்று 1956இல் தனிச் சிங்களச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

மீண்டும் 1970 இல் தரப்படுத்தல் கொள்கை தமிழருக்கு எதிராகக் கொண்டு வரப்பட்டது.

தமிழ்ப் பேசும் மக்களின் உயர்கல்வி பெறும் வாய்ப்புக்கு இது முற்றுப் புள்ளி வைத்தது.

பயங்கரவாத தடுப்புச்சட்டம்

எல்லாவற்றுக்கும் மேலாக 1979 இல் கொண்டு வரப்பட்ட பயங்கரவாதத் தடுப்புச்

(4ஆம் பக்கம் பார்க்க)

டாக்டர் காமினி ஈரியகொல்லை கூறுகிறார்

தீவிரவாதிகளுக்கு ஆதரவளிப்பது தமிழ்நாடு அல்ல; மத்திய அரசே!

நாய்கள் போல் சரணடைவதைவிட சண்டையிட்டுச் சாவதே மேல்!

கொழும்பு, ஜூன் 28

தமிழ்த் தீவிரவாதிகளுக்கு ஆதரவளிப்பது தமிழ்நாடு அல்ல, இந்திய மத்திய அரசே என்பதைஅனைவரும்நினைவில் கொள்ள வேண்டும்.

டாக்டர் காமினி ஈரிய கொல்லை இப்படித் தெரிவித்தார்.

கொழும்பு மேற்கு ரோட்டரிக் கழகம் ''ஸ்ரீலங்காவின் இறைமைக்கு ஏற்பட்டுள்ள பயமுறுத்தல்கள்''— என்ற தலைப்பில் கருத்தரங்கு ஒன்றை நடத்தியது.

அதில் பேசுகையில் திரு. ஈரியகொல்லை முன் கண்டவாறு தெரிவித்தார்.

தனது பாதுகாப்புக்கும் வெளிநாட்டுக் கொள்கைக்கும் ஸ்ரீலங்கா முக்கியமானது என்று இந்தியா கருதுகின்றது.

ஸ்ரீலங்காவில் இருந்து இந்தியத் தமிழரைத் திட்டமிட்டுத் திருப்பி எடுக்காமல் உள்ளது. ஸ்ரீலங்கா அரசியலில் தனது செல்வாக்கு இருக்கவே இந்தியா இப்படிச் செய்கின்றது.

இந்த நிலையில் இந்தியா எப்படி மத்தியஸ்தராக விளங்கமுடியும்?

புவியியல் அரசியலில் ஸ்ரீலங்கா கேந்திர முக்கியத்துவம் வகிக்கின்றது.

ஆகவே இந்து சமுத்திரத்தை அமைதிப் பிராந்தியமாக்கும் திட்டம் ஸ்ரீலங்காவுக்கு நன்மை பயக்குமா? என்பதை ஆராய்ந்துதான் பார்க்க வேண்டும்.

அமைதிப் பிராந்தியமாக்கப்படின், இந்தியக் கடற்படை தான் இந்து சமுத்திரத்தில் ஆதிக்கம் செலுத்தும். இந்து சமுத்திரத்தை சமாதானப் பிராந்தியமாக்கும் யோசனை குறித்து மீள் பரிசீலனை செய்யவேண்டும்.

ஆகவே நாம் சீனுவுடன் நெருங்கிய உறவுகளை வளர்க்கவேண்டும். இந்தியா சீனுவுக்குத்தான் பயப்படுகின்றது.

சீனு ஒன்றுதான் இந்தியாவின் விஸ்தரிப்பை தடுத்து நிறுத்தியுள்ளது.

ஆக்கிரமிக்கப்பட்டால், பயமுறுத்தப்பட்டால் நாம் போராடவேண்டும்.

நாய்கள் போல் சரணடைவதைவிட சண்டையிட்டுச் சாவதே மேல்.

இப்படி திரு. ஈரிய கொல்லை தெரிவித்தார்.

(இ-எ)

பொய்யாமொழி

குறள்:

செறுநரைக்காணின் சுமக்க இறுவரை
காணின் கிழக்காம் தலை.

பொருள் :

பகைவரைக் கண்டால் பொறுத்துச் செல்ல வேண்டும்; [illegible] காலம் வந்தபோது அவருடைய தலை கீழே விழும்.

தீர்வே தேவையானது பிரதேசசபைகள் அல்ல

இதுவேமுஸ்லிம்களின்எதிர்பார்ப்பாம்

மட்டக்களப்பு,ஜூன் 28

கிழக்குமாகாண முஸ்லிம்களின் இன்றைய எதிர்பார்ப்பு பிரதேச சபைகள் அல்ல, தமிழ் பேசும் மக்களின் இன்றைய நெருக்கடியான காலகட்டம் நீங்கி நிரந்தரமான தீர்வொன்று கிடைக்கவேண்டும் என்பதே அவர்களின் எதிர் பார்ப்பாகும்.

மேற்கண்ட கருத்தை அக்கரைப்பற்று பிரஜைகள் குழுத்தலைவர் ஜனப் ஏ. அகமத்லெப்பை பிரதேச சபைத் தேர்தல் குறித்து எமது செய்தியாளர் பிரஸ்தாபித்த போது தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதேசசபைத் தேர்தலில் போட்டியிட வேண்டுமென்ற ஆர்வம் முஸ்லிம் அரசியல்வாதிகள் மற்றும் இளைஞர்களில் ஒரு பகுதியினரிடம் காணப்படுகின்றது.

முஸ்லிம்களும், தமிழர்களும் ஒரேமொழியை பேசும் இரு சமூகத்தவர்கள் ஆவர்.

அதில் ஒரு சமூகம், இன்று இக்கட்டான நிலையில் வாழ்ந்து கொண்டு தமது விடிவை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்ற காலகட்டத்தில் அடுத்தசமூகம் அற்பசுகத்தைப்பெற்று அனுபவிக்கமுயல்வதுபரம்பரை பரம்பரையாக ஒற்றுமையாக வாழ்ந்துவந்த இரு சமூகங்களிடையேயும் வெறுப்பை ஏற்படுத்தும். அதுமட்டுமன்றி எதிர்கால சந்ததியினர்க்கும் இது ஒரு பிரச்சினையாக அமையும். — என்றார் அவர்.

(உ-21)

சமய சந்நிதிகளில்

ஸ்ரீசாயி துர்க்காதேவி உற்சவம்

திருநெல்வேலி,ஜூன் 28

கொக்குவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீசாயி துர்க்காதேவி ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை திங்கட்கிழமை பூச நட்சத்திரம் கூடிய சுபதினத்தில் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் உற்சவம் நடைபெறும்.

9 ஆம் திகதி வியாழக்கிழமை 11 மணிக்கு விசேஷ பூசையும் நண்பகல் 12 மணிக்கு மகேஸ்வர பூசையும் (அன்னதானம்) நடைபெறும். (இ-143)

LONDON EXAMS
I. D. P. M. — Parts I & II
A. A. T. — All Stages
I. . B. — all stages
Week end Classes
Commencement 4-7-87
Cantabia Institute
(Shoot of Oxonia, Colombo)
13, Rasavinthodam Lane,
(ஸ்ரான்லி ரோட் முடிவுக்கருகாமையில்)
JAFFNA.

உதயன்
28 - 06 - 1987 ஞாயிற்றுக்கிழமை

I. C. M. A. Stage: I Weekends
Economics Mr. S Kathirgamanathan
Business Law Mr Eugene Mariampillai
Accounting Mr. S P Sivapathasundaram
Quantitative Method Popular Varsity Lecturer
Commencement 4-7-87
Cantabia Institute
(Shoot of Oxonia Colombo)
13, Rasavinthodam Lane,
(ஸ்ரான்லி ரோட் முடிவுக்கருகாமையில்)
JAFFNA

எமது கட்சி ஆட்சிக்கு வந்தால்

இந்தியாவுக்கு எரிச்சலூட்டும் நடவடிக்கைகள் நிறுத்தப்படும்

சிறிமாவோ கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 28

இந்தியாவுக்கு எரிச்சலூட்டும் நடவடிக்கைகளை நிறுத்துவதே எமது கட்சி ஆட்சிக்கு வந்தவுடன் செய்யும் முதல் வேலையாக இருக்கும்.

இப்படி சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

பதவிக்கு வந்த பின்னர் இந்தியா சம்பந்தமாக சுதந்திரக் கட்சி என்ன கொள்கையைக் கடைப்பிடிக்கும்?

—இப்படி கொழும்புச் செய்தியாளர் ஒருவர் கேட்டபோது திருமதி பண்டாரநாயக்கா சொன்னதாவது:-

★ மொசாட் படைகள் நாட்டில் இருந்து வெளியேற்றப்படும்.

★ அமெரிக்க வானொலிநிலையம் அமைக்க அனுமதி அளிக்கப்படமாட்டாது.

★ பயிற்சி பெறுவதற்காக பாகிஸ்தானுக்குத் துருப்புகள் அனுப்புவது நிறுத்தப்படும்.

இவைதான் இந்தியாவுக்கு எரிச்சலூட்டுவதாக அமைந்துள்ளன.

இந்த நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதே சுதந்திரக் கட்சி பதவி ஏற்றவுடன் செய்யப்படும் முதல் வேலையாக இருக்கும்.

இப்படி திருமதி பண்டாரநாயக்கா தெரிவித்தார். (இ-எ)

வடமராட்சியில் உளவாளிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 28

வடமராட்சிப்பகுதியில் அரசின் பொலீஸ் உளவுப் படைகள் மக்களிடையே ஊருடுவியுள்ளன என்று கூறப்படுகிறது.

இவர்களிடம் பேச்சுக்களைப் பதிவு செய்யும் சிறு கருவிகளும் இருக்கின்றனவாம்.

போராளிகளுக்குச் சர்தகமாகப்பேசி மக்களிடம் இருந்து தகவல்களை இவர்கள் திரட்டுகிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது.

பலர் புதிய இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளதால் புதியவர்களோடு புதியவர்களாக இவர்களும் அகதிகளுடன் கலந்து விடுகின்றனராம்.

இதனால் பொதுமக்கள் இவர்களை இனம் காண முடியாத நிலையில் உள்ளனர். (இ-ள)



கொழும்புத்துறை செபமாலை மாதா அகதி முகாமில் இந்திய நிவாரணப்பொருள்கள் வழங்கும் வைபவத்தை இலங்கை - இந்திய செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் மங்கள விளக்கேற்றி வைபவரீதியாக நேற்று ஆரம்பித்து வைத்தனர்.

முதலாவது படத்தில் இந்திய செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதியும் இரண்டாவது படத்தில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதியும் காணப்படுகின்றனர்.

[படங்கள்: ஜெயம்]

இந்தியக் கப்பல்........

(1ஆம் பக்க தொடர்ச்சி)

வும் ஸ்ரீலங்கா அரசு அதிகாரிகள் கருதுவதாகத் தெரிகிறது.

எனினும் இந்திய நிவாரணப் பொருள்கள் முழுவதும் விநியோகித்துமுடிந்த பின்னரே தாம் இந்தியா திரும்ப முடியும் என்று இந்திய செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

நாம் அரசியல் நோக்கத்துடன் யாழ்ப்பாணத்துக்கு வரவில்லை. 'பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்கவே வந்திருக்கிறோம்—

ஒருமாத விசாவுடன் இங்கு தங்கிநிற்கும் நாம் இந்திய நிவாரணப் பொருள்கள் முழுவதும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கி முடிந்ததன் பின்பே இந்தியா திரும்புவோம் — என்று அவர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா இராணுவத்தின் நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நிவாரணமாக மொத்தம் பத்தாயிரம் தொன் உணவுப் பொருள்களை வழங்க இந்தியா உத்தேசித்திருக்கிறது. அதில் ஒரு பகுதியான 800 தொன் உணவுப்பொருள்களையே ''ஐலண்ட் பிறைட்'' ஏற்றிவந்தது.

''ஐலண்ட் பிறைட்'' இப்போது காங்கேசன் துறையில் நிற்கிறது. அது போவதற்கு முன் 'பொறுகா'' என்ற கப்பல் நிவாரணப் பொருள்களுடன் சென்னையிலிருந்து புறப்படும்.

இந்த இரண்டு கப்பல்களும் மாறி மாறித் தொடர்ச்சியாக இங்கு வரத் திட்டமிட்டுள்ளன. (அ-10)

நேற்று கோட்டை இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகம் காரணமாக காயமடைந்த இருவரை இந்திய— இலங்கை செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் யாழ் ஆஸ்பத்திரியில் வைத்து பார்வையிடுவதை முதலாவது படத்தில் காணலாம்.

மார்ச் மாதம் 30 ஆம் திகதி கோட்டை இராணுவத்தினரால் ஏவப்பட்ட ஷெல் குண்டுகளினால் சேதமடைந்த யாழ் ஆஸ்பத்திரி 19 ஆம் வார்ட்டை இலங்கை — இந்திய செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகளுக்கு போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் எஸ். நச்சினார்க்கினியன் விளக்கிக் காட்டுவதை இரண்டாவது படத்தில் காணலாம்.

(படங்கள் - ஜெயம்)

எல்லைக்காந்தி குணமடைந்தார்

பம்பாய், ஜூன் 27

91 வயதான எல்லைக் காந்தி கான் அப்துல் கபார்கான் பூரண சுகம் அடைந்தார்.

(இ-எ)

சகலருக்கும் . . .

(1ஆம் பக்க தொடர்ச்சி)

வாழும் தமிழர்கள் சொல்லொணாத் துயரத்துக்கு ஆட்பட்டுள்ளார்கள்.

ஆகவே இந்தியநிவாரண உதவிகள் அனைவருக்கும் கிடைக்கக் கூடியதாக விஸ்தரிக்கப்பட வேண்டும்—

இப்படி கூட்டணி பிரதமருக்குத் தெரிவித்துள்ளது. (இ-எ)

இந்திய நிவாரண..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முகாமில் 58 குடும்பங்களைச் சேர்ந்த முந்நூறு பேர் தங்கியுள்ளனர்.

சீனி, மா, மண்ணெண்ணெய், தீப்பெட்டி போன்ற நிவாரணப் பொருள்களே இவர்களுக்கு வழங்கப்பட்டன.

நிவாரண பொருள்களைப் பெற்றுக்கொண்ட அகதிகளிடம் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் நேரில் உரையாடி அவர்களின் கஷ்டங்களையும் அவர்கள் அனுபவிக்கும் சிக்கல்களையும் கேட்டறிந்தனர். (இ-ள-10)

இந்திய . . .

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

படும்.

யாழ் செயலகத்தில் அரச அதிபர் தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக்கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

கூட்டத்தில், உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி,மேலதிக அரசாங்க அதிபர்கள், போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர், இலங்கை இந்திய யாழ்செஞ்சிலுவைச் சங்கப்பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாண மக்களுக்கு இந்திய நிவாரண உணவுப் பொருள்களை வழங்கியதற்காக இக்கூட்டத்தில் இந்திய இலங்கை செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளிடம் யாழ் அரசஅதிபர் தமது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

6 மணி நேரம் படகில் இருந்து விடிந்த பின்பே படையினரால் கொண்டு செல்லப்பட்டோம்

நேற்று விடுவிக்கப்பட்டோர் தகவல்

காங்கேசன்துறை, ஜூன் 28

இந்தியக் கடல் எல்லையை அரை மணி நேரத்தில் அடைந்து விடுவோம் என ஆவலுடன் இருந்த சமயம் எதிரே தென்பட்ட இலங்கைக் கடற்படையிடம் நாம் சிக்கினோம். ஆறு மணி நேரமாக உயிரைக் கையில் பிடித்தபடி கடலில் இருந்து விடிந்த பின்பே கடற்படையினரால் கொண்டு செல்லப்பட்டோம்.

இந்தியாவுக்கு அகதிகளாகச் சென்ற சமயம் கடற்படையால் கைது செய்யப்பட்டு நேற்று விடுதலை செய்யப்பட்டவர்களில் இருவரான கந்தப்பிள்ளை சிவலிங்கம், சின்னத்தம்பி வசந்தகுமார் ஆகியோர் உதயன் செய்தியாளரிடம் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் கூறியதாவது:

கடந்த 23ஆம் திகதி வேலணையிலிருந்து இரு படகுகளில் 125 பேர் இந்தியாவுக்குப் பயணமானோம்.

இதில் 40 பேர் வரை பெண்களும் 30 குழந்தைகளும் இருந்தனர். ஆளுக்கு 1300 ரூபா கொடுத்து பிரயாணத்தை ஆரம்பித்தோம்.

இரு படகுகளும் நடுக்கடலில் சென்றுகொண்டிருந்தபோது இன்னும் அரை மணி நேரத்தில் இந்தியக்கடல் எல்லையை அடைந்து விடுவோம் எனப் படகோட்டிகள் கூறினர்.

நாம் எல்லோரும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தோம். அச்சமயம் எதிரே ஒரு வெளிச்சம் தெரிந்தது. அது இந்திய ரோலர் என நினைத்து இருந்தோம்.

ஆனால் கிட்ட நெருங்கியபோது இலங்கைக் கடற்படைப்படகு எனத் தெரியவந்தது.

எமது படகுக்கு அருகில் வந்த கடற்படையினர் எம்மை விசாரித்துவிட்டு படகு என்ஜின் சாவிகளைப் பறித்துக் கொண்டு நடுக்கடலிலே நிற்குமாறு கூறிச் சென்றனர்.

நடு இரவு 12 மணியிலிருந்து விடியும்வரை படகிலேயேஇருந்தோம். படகினுள் நீர் புகுந்தபோதும் அவற்றை அள்ளி ஊற்றியபடி உயிரைக் கையில் பிடித்துக் கொண்டிருந்தோம்.

24ஆம் திகதி காலை எமக்கருகில் வந்த கடற்படையினர் எம்மை தமது படகுடன் கட்டி இழுத்துச் சென்று காங்கேசன்துறை முகாமில் ஒப்படைத்தனர்.

3 தினங்களாக அங்கு வைத்து விசாரணை செய்த பின் இன்று நண்பகல் (27-6-87) 12 மணியளவில் 103 பேரை விடுதலை செய்து மாவிட்டபுரம் வரை கொண்டு வந்து விட்டனர்.

22 பேர் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இப்படி அவர்கள் கூறினர். (இ-68)

டிக்ஸிற்------

(1ஆம் பக்க தொடர்ச்சி)

களுடன் முதலாவது கப்பல் காங்கேகன்துறைக்கு வந்த அன்றே (வியாழன்) அவசர அழைப்பின் பேரில் திரு. டிக்ஸிற் புதுடில்லி சென்றிருந்தது தெரிந்ததே.

ராஜீவ் - டிக்ஸிற் சந்திப்பை அடுத்து இலங்கைப் பிரச்சினை தொடர்பான அமைச்சரவை உபகுழு கூடி யாழ்ப்பாணத்தில் உருவாகி உள்ள ஆகப்பிந்திய நிலைமை குறித்து ஆராய்ந்தது.

[இ-எ]

சின்னக்கடை..

(1ஆம் பக்க தொடர்ச்சி)

மணியளவில் இச்சம்பவம் நடைபெற்றது.

சின்னக்கடைப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் பதுங்குகுழி வெட்டிக் கொண்டிருந்த ஒருவரும் கடைப் பகுதியில் நின்ற மூவருமே காயமடைந்தவர்கள் ஆவர்.

காயமடைந்த நான்கு பேரும் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களை இந்திய செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளும் கொழும்பு செஞ்சிலுவைச்சங்கப் பிரதிநிதிகளும் பார்வையிட்டனர். (இ-10)

பொதுமக்கள் பணயம்

மட்டக்களப்பு, ஜூன் 28

அக்கரைப்பற்று, காஞ்சிரங்குடா, திருக்கோயில், தாண்டியடி ஆகிய இராணுவ முகாம்களில் இருந்து நேற்று வெளியேறிய சிப்பாய்கள் 100க்கும் மேற்பட்ட பொதுமக்களைக் கைது செய்து ''கஞ்சி குடித்த ஆறு'' என்ற இடத்தில் பணயமாக வைத்துள்ளனர்.

இதனை அடுத்து அப்பகுதிகளில் விடுதலைப் புலிகளுக்கும் சிப்பாய்களுக்கும் இடையில் கடும் சண்டைகள் மூண்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ)

பொறுகா இன்று வருகிறது

புதுடில்லி, ஜூன் 28

இந்திய சரக்குக்கப்பலான 'பொறுகா' 500 தொன் உணவுப் பொருள்களுடன் இன்று ஞாயிறு சென்னையில் இருந்து காங்கேசன் துறை நோக்கி புறப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்படி இந்திய வானொலி நேற்று இரவு அறிவித்தது. (இ-எ)

கைவிடப்பட்ட வீடுகளில் திருட்டு

அண்மைக்காலச் சம்பவங்களால் அச்சுவேலியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களது வீடுகளில் திருட்டுக்கள் இடம் பெறுகின்றன.

இராணுவம் வந்து நின்றபோது இராணுவத்திற்குச் சமையல் செய்து கொடுத்தும், வேறுவகைத் 'தொட்டாட்டு' வேலைகளையும் செய்து கொடுத்த சிலரே இவ்வித செயல்களுக்குக் காரணம் என்று கூறப்படுகிறது. (இ-119)

உலகில்- -

(1ஆம் பக்க தொடர்ச்சி)

கிடைக்காத யுத்த அனுபவம் யாழ். வைத்தியசாலைக்குக் கிடைத்துள்ளது' என்றார்.

இந்திய, இலங்கை செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் யாழ். வைத்தியசாலையைச் சென்று பார்வையிட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

வடமராட்சியிலிருந்தும், மற்றும் யாழ். நகரின் பல பாகங்களில் இருந்தும் வந்து சிகிச்சை பெறும் காயமடைந்த நோயாளர்களை சந்தித்து அவர்கள் உரையாடினர்.

கோட்டை முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல்களால் பாதிக்கப்பட்டிருந்த வார்ட்டுகளையும் அவர்கள் பார்வையிட்டனர்.

ஷெலித் தாக்குதலால் தாய், தந்தை, சகோதரனைப் பறிகொடுத்து காயமடைந்து வாட்டில் தங்கியிருக்கும் குரும்ப[illegible]ந்த நாகேஸ்வரி எனும் 13 வயது [illegible]க்கு அவர்கள் ஆறுதல் கூறினர்.

(இ-ள)

தமிழரை அழித்து..

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

சட்டம் நாட்டில் உள்ள தமிழ் பேசும் மக்கள் அனைவரையும் பயங்கரவாதிகளாகக் கருதும் நிலையை ஏற்படுத்தியது.

தமிழர் எவரையும் சிறையில் அடைக்கவும், சுட்டுக்கொல்லவும் வழி செய்யும் அதிகாரத்தை அரசு பெற்றது.

தமிழரை அழித்தொழிக்கும் கொள்கை இத்துடன் முழு வேகத்துடன் ஆரம்பமானது. 1975, 1978 ஆம் ஆண்டுகளில் சுமார் 2½ லட்சம் தமிழர் உயர் கல்வி, தொழில் வாய்ப்புப் பெற வெளிநாடுகள் சென்றனர். அவர்களை வெளிநாடு செல்ல அரசு மறைமுகமாகத் தூண்டியது.

வெளிநாடுகளில் காணப்பட்ட உயர்கல்வி, தொழில் வசதிகள் இத் தமிழர்களை தாயகத்தில் இருந்து இழுத்தெடுத்தன.

அபிவிருத்தி என்ற பெயரில் தமிழரின் தாயகம் சிறிது சிறிதாக பறிக்கப்பட்டு வந்தது. அரசின் திட்டமிட்ட குடியேற்றத் திட்டங்களும் இதற்கு உதவின.

1948 ஆம் ஆண்டில் ஆரம்பமான இந்த அபகரிப்பு இன்றுவரை தொடர்கிறது. மலையகமும் கிழக்கு மாகாணமும் இந்த அபகரிப்புக்கு இலக்காகியுள்ளன.

தமிழ் ஈழம்

இந்தக் காரணிகளின் அடிப்படையில் தான் நாம் தனித் தாயகம் -என்ற தமிழ் ஈழம்- கொள்கையை பிரகடனப்படுத்தினோம்.

1983 இல் அரசு இதற்குத் தடை விதித்தது. தமிழரின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் பறிக்கப்பட்டது.

தமிழருக்குரிய பாரம்பரியத் தாயகம் என்ற சிந்தனையை அழித்துவிடும் முயற்சிகளைத் தான் அரசு மேற்கொள்ளத் தொடங்கியது.

இவ்வளவு அரசியல் அநீதிகளையும் செய்து முடித்த பின்னர் ஸ்ரீலங்கா அரசு இராணுவப் படைகளைப் பாவித்து எம் இனத்தையே நாட்டில் இருந்து அழித்துவிட முனைந்து செயற்படுகின்றது.

[illegible] ஸ்ரீலங்கா அரசு எப்படி [illegible] பதைப் பார்ப்போம்.

(வளரும்)

பிரயாண ஒழுங்குகள்
★ குவைத் ★

1. குவைத் நாட்டிற்கு Cleaning Labour ஆகச் செல்ல விரும்புபவர்கள் 01-07-87 க்கு பின் கீழ்வரும் ஆவணங்களுடன் சமுகம் கொடுக்கவும். வயதெல்லை 19 40
1. PASS PORT
2. PASS PORT PHOTO பிரதி
3. GRAMA SEVAGA சான்றிதழ்
4. PHOTO — 10

KUWAIT

2. Marine Fitters 6 Years Experience
1. In Marine Disel Engines
2. Compresosors
3. Pumps
4. Winches and Capstans
5. Valves and Actuators
6. Hydraulic Systems
7. Trouble shooting and knowledge of spare parts

Duties 12 hours on. 24hours off.
Shift basics salary K. D. 65 p. m.
including food allowances free Accomadation (1 K. D- Rs. 105)

4. MOORING LABOURER: Strong armed experienced men to fasten ships with heavy Mooring rope

முக்கியகுறிப்பு:
★ குடா நாட்டில் வேறு பிரதிநிதிகள் இல்லை. யாபேரும் நேரடியாக தொடர்பு கொள்ளவும்,

தலைமை அலுவலகம்:
Construction
& Development
Company Ltd.
37, S. DE.S. JEYASINGHE MAWATHA
NUGEGODA.
Labour Licence No. 96

V. P. பாலா
(V. P பாலசுப்பிரமணியம்)
C/o V. பொன்னுத்துரை,
பாடசாலை வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். 1444

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 28-06-1987.

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd at 292/2 Navalar Road, Jaffna on Sunday June 28, 1987 Registered as a Newspaper at the General Post Office under number QJ/94/N/87